Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 50

## ஐங்குறுநூற்றில் மருதத்திணையில்பெண்களின் நிலை

**நெறியாளர், முனைவர் கோ.தேவிபூமா**
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை-625 004.
அலைபேசிஎண்-7558184548.
**செல்வி அ.ரேவதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர்திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை-625 004.

### ஆய்வுச்சுருக்கம்

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு மட்டுமே உண்டு. இப்பெருமக்கள் வளர்த்த இலக்கியங்கள்எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகும். அவை எட்டுத்தொகையில் மூன்றாவதாக உள்ளஅகஇலக்கியமான 'ஐங்குறுநூற்றில் மருதத்திணையில் பெண்களின் நிலை 'என்னும் இக்கட்டுரையின் தலைப்பின்கீழ் ஆராயப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் பெண்கள் குறிப்பாக ஐங்குறுநூற்றில் பெண்கள் அவர்களின் நிலை பற்றி எடுத்துரைக்கும் படியாக அமைந்துள்ளது. இதில் தலைவி, தோழி, பரத்தை,காதற்பரத்தை ஆகிய பெண்கள் இடம்பெறுவார்கள். அவர்களின் ஒவ்வொரு நிலையில் இருந்துஅவர்களுக்கான வாழ்க்கைச் சூழல்எவ்வாறு அமைந்துள்ளது என்பதை

குறிப்பிடப்பட்டுள்ளது.தலைவி இல்லறம் நடத்தும் முறை, குழந்தைப் பேறு அடைத்தல், ஊடலில்தலைவி,கூடிமகிழ்தலில் இவ்வாறு தலைவி நிலைகளை ஆராயப்பட்டுள்ளது.தோழி அக இலக்கியத்தில் தோழியின் பங்கு மிகச்சிறப்புவாய்ந்தவையாகும்.

இதில்தலைவனிடம்தலைவிக்காக,தலைவியிடம்தலைவனுக்காகவும்பேசக்கூடிய பாத்திரம்தோழியே ஆவாள். களவிலும், கற்பிலும்தலைமக்களின்நலனை ஆராயக்கூடியவள் தோழி. மருதத்திணையில்அவளுக்கான நிலை எண்ணஎன்பதை குறிப்பிட்டுள்ளேன்.

பரத்தை, காதற்பரத்தை தலைவனை கூடி மகிழ்வதே நாளும் எண்ணுதல்,தலைவியின் மனதை வருத்தமுறச் செய்யும் இவர்கள் சில நேரங்களின் தலைவிக்கான நிலையேயும் தலைவனிடம் எடுத்துரைப்பார்கள். இவ்வாறு மருதத்திணையில் இடம்பெறும் பெண்களின் நிலைகள் ஆராய்ப்பட்டுள்ளதே இக்கட்டுரையில் காணலாம்.

# ஐங்குறுநூற்றில் மருதத்திணையில்பெண்களின்நிலை

நெறியாளர்,செல்வி அ.ரேவதி, முனைவர் கோ.தேவிபூமா,முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்உயராய்வுமையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மன்னர்திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை,மதுரை-625 004. அலைபேசிஎண்-7558184548.அறிமுகம் எட்டுத்தொகையில் மருதத்திணையை முதன்மையாக வைத்த நூல்ஐங்குறுநூறு ஆகும். இப்பாடல்கள் மூன்று அடிச்சிறிய அளவிலும் ஆறு அடிப்பெரிய அளவிலுமாக ஐந்நூறு பாடல்கள் அமைந்துள்ளது. ஐந்திணைவாரியாகஎழுதியவர்கள் யார் என்பது பற்றி இலக்கியம் தரும் சான்றுகள்.

“மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலன் கருதிய
பாலை ஓதலாந்தை பனி முல்லை பேயனே
நூலைஓது ஐங்குறு நூறு”

இந்நூலை தொகுக்கச் செய்தவன் அல்லது தொகுப்பித்தவன் யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இவன் சேர அரசன்.இதனைத் தொகுத்தவர்புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். ஒவ்வொரு திணைப்பாடல்களும் பத்துப்பத்துப்பாடல்களாகப் பகுத்துப்பாடப்பெற்றுள்ளன. அவை மருதத்திணை வயலும் வயல்சார்ந்த பகுதியாகும். இதை எழுதியவர்

ஓரம்போகியர் இவர் மருத நில மக்களின் வாழ்வியல் கூறுகளை முன்வைத்து எழுதியுள்ளார்.

## தலைவியின் நிலைகள்

அகமாகிய மனைவாழ்வு சிறப்பாக அமையவில்லை என்றால் மக்களிடையேபுறவாழ்வு பொலிவு பெறாது என்பது தமிழர் கண்ட முடிவு. அவை இல்லின் கண்வாழும் வாழ்க்கையினை'இல்லறம்' என இனிய தமிழ்ச்சொல்லில் கூறுவர்.இதற்கேற்ப தலைவி தன் குடும்பத்தில் நடப்பதை மற்றவரிடம் தெரிவிக்க கூடாதுஎன்பதற்காக தன் உயிர் தோழியிடம்மறைத்து தலைவனின் குறைகளை விடநிறைகளைச் சொல்லுகிறாள். அவை

"மனைநடு வயலை வேழம் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்றும் யாமே
அல்லன் என்னும்என் தடமென் தோளே"[1]
(ஐங்குறுநூறு-மருதம்.2)

தலைவன் புறத்தொழுக்கத்தால் தனக்குக் கொடுமை செய்தாலும். தலைவன் நல்லவன் என்று சொல்லுகிறாள்.ஆனால் அவள் தோள்கள் தலைவனின் பிரிவால்மெலிந்திருக்கிறது என்ற செய்தியை முன்வைக்கிறது.

"அம்ம வாழி தோழி ஊரன்
வெம்முலை அடைய முயங்கி நம்வயின்
திருந்துஇழைப் பணைத்தோள் ஞெகிழ
பிரிந்தனன் ஆயினும் பிரியலன் மன்னே"[2]
(ஐ.நூ-39)

தலைவன் தன் தோள்கள் மெலிய பிரிந்தாலும் உள்ளத்தால்பிரியவில்லை என்றுதலைவனை விட்டுக்கொடுக்காமல் பேசுகிறாள்.

## அழகுநிலை

தலைவிதலைவனைப்பிரிந்ததால்அவளின்அழகுஇழந்துவருந்தும்நிலைகள்.அவை

"பூப்போல் உண்கண் பொன்போர்த் தனவே"3(ஐ.நூ-16)

தலைவனைப் பிரிந்த தலையின் கண்கள் பசலையுற்றநிலை. இதுபோல்

"என் இறைஏர் எல்வளை நெகிழ்பு ஓடும்மே"[4](ஐ.நூ-20)

தலைவனை நினைத்து தலைவியின் முன்கை வளையல்கள் கழன்றுவிழுகும் நிலை பற்றி குறிப்பிடுகிறது.

"பொய்கை ஆம்பல் நார்உரி மென்கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே
இனிப் பசந்தன்றுஎன் மாமைக் கவினே"[5]
(ஐ.நூ-35)

தலைவியின் அழகு ஊர்க்குளத்தில் வளர்ந்த ஆம்பல் தண்டு நார்உரிக்கப்பட்டதோற்றத்தினைவிட ஒளியுடையதாக இருந்தது. ஆனால்இப்போது தலைவனின்பிரிவால் தலைவியின் மேனி பசலையுற்றது என்று இவ்வரிகள்குறிப்பிடுகிறது.

## ஊடல் நிலை

தலைவன் பரத்தையரிடம்சென்று வீடு திரும்பும்போது தலைவிஊடல்கொள்ளும் நிலைகள். அவை

"இந்திரல்விழவிபூவின் அன்ன
புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்துஇனி
எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் தேரே"[6] (ஐ.நூ-62)

மருதநிலத் தலைவனே இந்திரவிழா நடைபெற உள்ளது. உன் தேர் மங்கையரைத்தொகுக்க எவ்வூரில்நிற்கும் என்று தலைவி கேளியோடு ஊடல்கொள்கிறாள்.

"தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎய் அனையம்யாம்சேய்பயந் தனமே"[7] (ஐ.நூ-70)

நீர்நிலையில் பல்வகை மீன்களையும் உண்பதற்காக மருதமர உச்சியில் தங்கும்நாரை இங்கு பலமீன்கள் என்பது பரத்தையும் நாரை என்பதை தலைவன் என்றும்குறிக்கப்படுகிறது. தலைவனிடம் உன் பரத்தையர் தூய்மையானவர்மணமுடையவர் ஆனால் நான் உனக்குக் குழந்தை பெற்றதால் பேய் போன்றவள்ஆகிவிட்டேன் என்றுதலைவிஊடல்கொள்கிறாள்.

## தோழியின் நிலை

தலைமக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுபவள் தோழியேஆவாள். களவிலும் சரி,கற்பிலும் சரி தனக்கான அறநிலையில் இருந்துமற்றவருக்கான அற நிலையை உணர்த்துபவள் தோழியே என்பதற்கினங்க. அவை.

"தீம்பெரும் பொய்கை யாமைஇளம் பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசினாஅங்கு
அதுவே ஐயநின் மார்பே
அறிந்தனை ஒழுகுமதி அறனுமார் அதுவே"[8](ஐ.நூ-44)

நீர்நிலையில் வாழும் ஆமையின் இளம் குட்டி தன்தாய் முகம் பார்த்து வளர்வதைப்போன்று. தலைவி உனது மார்பை நோக்கி வாழுவதை நீ அறிய வேண்டும் என்றும்அதுதான் அறமும் கூட என்று தோழி தலைவனுக்கான அறம் பற்றி உரைக்கிறாள்.

"செவியிற் கேட்பினும் சொல்இறந்துவெகுள்வோள்
கண்ணிற் காணின் என்ஆ குவள்"[9]
(ஐ.நூ-84)

குளம் போல அனைவரும்படிந்து இன்புறும் பரத்தைமையை உடையது உன் மார்பு என்று ஊரார் பேசுவதைக் காதால் கேட்டாலே உன் தலைவி பெருஞ்சினம்கொள்கிறாள். அக்காட்சியைக் கண்ணால் கண்டால் அவள் என்ன ஆகுவாளோ.என்று நீ உணராது என்று தோழி உரைக்கிறாள்.

## பரத்தையின் நிலை

தலைவன் தனக்கென உரியவளாகத் தலைவி இருக்க புறப்பெண்டிர் மாட்டுநாட்டம் கொள்கிறான். புறப்பெண்டிர்கள் பரத்தையர் என்றும் காமம்கிழத்தியர்என்றும் அழைக்கப்பட்டனர் பரத்தையரை இற்பரத்தை, காதற்பரத்தை,சேரிப்பரத்தை என்றெல்லாம் பிரிப்பது உண்டு. இதில்பரத்தையர் யார் யார்என்றால் அவர் ஆடலும், பாடலும் வல்லவராகி அழகும், இளமையைக் காட்டிஇன்பமும், பொருளும் வெங்கி ஒருவர் மட்டும் தங்காதவர் என இளம்பூரணர்பரத்தை பற்றி குறிப்பிடுகிறார்.தலைவனை தன்னோடு வைத்துக்கொள்ள நினைக்கும்பரத்தை.

"நின்னொடு தண்புனல் ஆடுதும்
எம்மொடு சென்மோ செல்லல்நின் மனையே"[10](ஐ.நூ-77)

குளிர்ந்த புனலில் நீராட விரும்புகிறோம். இவ்வூர் முழுவதும் அலர் எழுமாறு

மகிழ்வுடன் இருக்க விரும்பும்கிறோம். ஆகையால் எம்முடன் வருக நீ உன் வீட்டிற்குச் செல்லாதிருக்க என்று தலைவனிடம் பரத்தை கேட்கிறாள். தலைவியின் நிலை அறிந்து பரத்தை தலைவனிடம் கூறுவதாக அமைவது.

அவை

"என்னை நயந்தனென் என்றிநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே"[11](ஐ.நூ-81)

நீ என்னை விருபும்கிறேன் என்று கூறுகிறாய் இதை உன் மனைவி கேட்டால்மிகவருந்துவாள் என்று பரத்தை தலைவனிடம் கூறுகிறாள்.

"எம்இவண் நல்குதல் அரிது
நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே"[12] (ஐ.நூ-86)

வெண்மையான தலையையுடைய நாரையின் குஞ்சுகள் அழைக்கும்குரல் நீண்டவயல்களுக்கு நெருக்கமாக வந்து ஒலிக்கும் ஊரனே. நீ இனி எம்இல்லத்தில்தொடர்ந்து வாழ்ந்து எமக்கு அருளுதல் அரிது. இனி நீ இல்லத்தரசியுடன் சென்றுவாழ்வாயாக என்று பரத்தை தலைவனிடம் கேளியுடன் அவனுக்கான நெறி என்னஎன்பதையும் குறிப்பிடுகிறாள்.

## காதற்பரத்தை

தலைமகள் தன்னை புறங்கிறினாள் எனக் கேட்ட காதற்பரத்தை பாங்கிற்கு தலைமகளுக்கு என அவர்களுக்கு கேட்கும்படி தலைவனிடம் தலைவி என்னைகுற்றம் சாடுகிறாள். என காதற்பரத்தை குறிப்பிடும் வரிகள். அவை

"மகழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின்மாண்குணம் மகிழ்நன்கொண் டான்கொல்
அன்னது ஆகலும்அறியாள்
எம்மொடு புலக்கும்அவன் புதல்வன் தாயே" (ஐ.நூ-90)

பல மலர்களில் பறந்து சென்று தேனை உண்பது வண்டுகளின் குணம். அதுபோல தலைவனும் பல பரத்தையரிடம் இணைந்து மகிழ்கிறான்.

தலைவனின் குணம் வண்டுகள் பெற்றதா இல்லை! வண்டுகளின் குணத்தை தலைவன் பெற்றானா தெரியவில்லை. அவ்வாறு இருக்க புதல்வனின் தாயாகியதலைவி என்னுடன் சண்டையிடுகிறாள். எனவும் பரத்தைதலைவனிடம்குறிப்பிடுகிறாள்.

## முடிவுரை

மருதத்திணை மக்களின் வாழ்க்கை முறை பற்றி அவர்களின் நிலை எப்படிஅமைந்துள்ளது என்பது பற்றியும் குறிப்பிடுகிறது. அவை ஐவகை நிலங்களிலேயேமிகவும் வளமுடைய நிலம் மருதமாகும். அந்நிலத்தின் தலைவன் பொருளாதார நிலையில்மேம்பட்டு இருப்பதால் உண்டு களித்தலிலும் பரத்தையரோடுகூடிமகிழ்வதில்லும் பொழுதை கழித்தார்கள்.

ஆதலால்அந்நிலத்தின் பெண்களின்நிலையைப் பற்றி இக்கட்டுரை விளக்கியுள்ளது.

## அடிக்குறிப்பு

1. சுப்பிரமணியன்.ச.வே., - ஐங்குறுநூறு, பாடல் எண் -2
2. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -39
3. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -16
4. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -20
5. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -35
6. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -62
7. சுப்பிரமணியன்.ச.வே., ஐங்குறுநூறு, பாடல் எண் -70
8. சுப்பிரமணியன்.ச.வே., - ஐங்குறுநூறு, பாடல் எண் -44
9. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -84
10. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -77
11. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -81
12. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -86
13. சுப்பிரமணியன்.ச.வே., -ஐங்குறுநூறு, பாடல் எண் -90

## துணைநூற்பட்டியல்


1. காந்திமதிலட்சுமி.ந., - தொல்காப்பியர் இலக்கியக் கோட்பாடுகளும் ஐங்குறுநூறும் நீதா பதிப்பகம் தூத்துக்குடி மு.ப. திசம்பர் -1996.
2. சாமி சிதம்பரனார் -எட்டுத்தொகையும் தமிழர்பண்பாடும் அறிவுப்பதிகம் முதற்பதிப்பு அக்டோபர் -2003. சென்னை – 600108.
3. சுப்பிரமணியன்.சு.வே சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி-1 மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108.
4. தட்சிணாமூர்த்தி.அ, (உ.ஆ)- சங்க இலக்கியம் ஐங்குறுநூறு மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மூன்றாம் பதிப்பு பிப்ரவரி - 2007. சென்னை - 600108.